நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 16 புதன்கிழமை (30 06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 214

# பொருளாதாரத் தடை: மீண்டும் முழு அளவில்!

## கைதிகள் விடுவிப்புக் குறித்து காணப்பட்ட இணக்கம் முறிவு

கொழும்பு, ஜூன் 30

யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் காணப்பட்ட இணக்கம் முறிவடைந்திருப்பதை அடுத்து —

வடக்கிற்கான பொருளாதாரத் தடை மீண்டும் முழு அளவில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சில அத்தியாவசியப் பொருள்களை வடக்கே எடுத்து வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதாக அரசு முன்னர் விடுத்த அறிவிப்பு வாபஸ் பெறப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல், டீஸல், என்ஜின் ஒயில், உரம், சைக்கிள், சிறிய டிரான்ஸிஸ்டர் ரேடியோ, மருந்து வகைகள், காகிதாதிகள், பாடசாலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கல்முனை கடற் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த குருநகரைச் சேர்ந்த - மனுவேல் பிள்ளை றொபேட் சுகிர்தசிலன் (வயது 32) என்ற இளைஞர் ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-5-15-17-51)

## பிரேமா கொலையை அடுத்து
## கொழும்பில் 2வாரங்களில் 8 ஆயிரத்து 300 தமிழர் கைது

கொழும்பு ஜூன் 30

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலையையடுத்து கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருவார காலத்தில் 8 ஆயிரத்து 301 தமிழர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாக கொழும்பு பத்திகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளை சேர்ந்த இளைஞர், யுவதிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் சுமார் 2 ஆயிரத்து 400 பேர் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டு, சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும்—

மற்றொரு பகுதியினர் பொலீஸ் நிலையங்களில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர் என்றும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரசேகரா மீண்டும் யாழ். வருகிறார்?

யாழ்ப்பாணம் சென்றிருக்கும் யுத்தக் கைதிகளின் உறவினர்களை மீண்டும் கொழும்புக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக பிரிகேடியர் ஆனந்தா வீரசேகரா நேற்று முற்பகல் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் அவர் யாழ்ப்பாணம் சென்றிருப்பதாக "வெரித்தாஸ்" வானொலி அறிவித்தது (உ-6)

## அமெரிக்காவை கண்டிக்கிறார் பாப்பரசர்

வத்திக்கான், ஜூன் 30

ஈராக் மீது அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலை பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் கண்டித்துள்ளார்.

ஏவுகணைத் தாக்குதலில் சாதாரண மக்கள் கொல்லப்பட்டமைக்கு கண்டனத்தை தெரிவித்த அவர் இது போன்ற சம்பவங்கள் வளைகுடாவில் பதற்றத்தையே தோற்றுவிக்கும் என்று எச்சரித்தார். (உ-5)

## அல்லிப்பளை கடற்கரையில் நேற்று விமான குண்டுவீச்சு!
### நான்கு படகுகள் சேதம்

தென்மராட்சி, ஜூன் 30

நேற்றுக் காலை 8.00 மணிக்கு மூன்று குண்டு வீச்சு விமானங்கள் கிளாலி அல்லிப்பளை, கடற்கரையில் நின்ற படகுகளை நோக்கி மாறி மாறி குண்டு வீச்சையும், ரொக்கட் தாக்குதலையும் நடத்தின. இதனால் நான்கு படகுகள் பலத்த சேதமடைந்தன.

குண்டுகள் கடல் பகுதியில் வீழ்ந்து வெடித்ததால், உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. குண்டு வெடித்த சத்தம் பளை) பகுதியையே அதிர வைத்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## "றுகுணு" கப்பல் திருமலையில் தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

தடை நீக்கப்பட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த பொருள்களுடன் காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்த "றுகுணு" கப்பல், நேற்றுக்காலை திருகோணமலை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்ததாகவும்—

கொழும்பு அதிகாரிகளின் உத்தரவையடுத்து அங்கு கப்பல் தரித்துள்ளதாகவும்—

நேற்றுமாலை யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பல் பருத்தித்துறை நோக்கி வருமா? அல்லது மீண்டும் கொழும்பு திரும்புமா? என்பது குறித்து நேற்று மாலை வரை முடிவு செய்யப்படவில்லை என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3-5)

## துவக்குகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 30

தியத்தலாவை இராணுவப் பயிற்சி நிலையத்துக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 105 ரைபிள்களும் மற்றும் ரவைகளும் நுவரெலிய பொலீஸாரினால் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் அண்மையில் நடத்தப்பட்ட தேடுதலின் போது இவை சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## பூநகரிப்பாதை விவகாரம்:
## புலிகளின் அறிக்கை ஐ.நா. அதிகாரிகளுக்கு!
### அடுத்த வாரம் கையளிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 30

பூநகரி பாதையைத் திறப்பது தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்த உடன்பாடு பற்றி நேற்று மாலை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும் பேச்சு நடத்தினர்.

ஐ. நா. தூதரகத்தின் சார்பில் இலங்கைக்கான அதன் வதிவிடப் பிரதிநிதி திரு.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் உறவினர்களில் 7 பேர் இன்று கொழும்புக்கு!
### ஏனையோர் இங்கு தங்க விருப்பம்

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளைச் பார்வையிடுவதற்கு யாழ்ப்பாணம் வந்த அவர்களின் உறவினர்களில் ஏழு பேர் இன்று கொழும்பு திரும்பவிருக்கின்றனர்.

யுத்தக்கைதிகளின் உறவினர்களை நேற்று சந்தித்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள், கொழும்புக்கு திரும்புவது தொடர்பாக அவர்களின் விருப்பத்தை கேட்டதாகவும்—

அவர்களில் பெரும்பாலானவர்கள் யுத்தக்கைதிகள் தொடர்பான பிரச்சினைக்கு ஒரு முடிவு வரும் வரை இங்கு தங்கியிருக்க விருப்பம் தெரிவித்ததாகவும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு செல்ல விருப்பம் தெரிவித்த ஏழு பேர் இன்று "குமண" கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று விசேட வங்கி விடுமுறை

யாழ்ப்பாணம், ஜூன் 30

விசேட வங்கி விடுமுறை தினமான இன்று வாடிக்கையாளர்களுடனான பணக் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் நடைபெறா என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (த-162)

## கிளாலியில் மோதல்

கிளாலி கடற் பிராந்தியத்தில் நேற்றிரவு விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இரவு 8. 15 மணியளவில் பயணிகள் படகுகள் ஆலங்கேணியை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் ஞானிமடம் இறங்குதுறைப் பக்கத்திலிருந்து கடற்படையின் படகுகள் பயணிகள் படகுகளை நோக்கி முன்னேறிய போதே கடற்புலிகள் தாமதியாது கடற்படைப்படகுகளை நோக்கி விரைந்து தாக்குதலை தொடுத்தனர்.

இரவு 9 மணி வரை சுமார் 45 நிமிடநேரம், இடம்பெற்ற இம்மோதலைத் தொடர்ந்து பூநகரிப்பகுதி இராணுவ முகாமில் இருந்து கிளாலி கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இம் மோதலின் போது ஏற்பட்ட சேத விவரங்கள் தெரிய வரவில்லை. (உ-15)

## புதிய நிபந்தனைகளை புலிகள் விதிக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 30

யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக புதிய நிபந்தனைகளை விடுதலைப்புலிகள் விதித்திருப்பதாக ஸ்ரீலங்கா அரசு கூறியுள்ள குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் இயக்கம் மறுத்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' நேற்றிரவு இந்தமறுப்பை வெளியிட்டது.

அரசுடன் ஏற்பட்ட உடன்பாட்டிற்கு அமைய, வடபகுதி மக்களின் ஒருமாத தேவைக்குரிய பொருள்களின் பட்டியலை மட்டுமே தாம் அனுப்பி வைத்ததாகவும் —

அந்தப் பட்டியல் கூட, அரச திணைக்களங்கள் மூலமே தயார் செய்யப்பட்டது என்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு அமைதிப் படை: ஐ. நா. வட்டாரங்களில் பேச்சு

வாஷிங்டன், ஜூன் 30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பன்னாட்டு அமைதி காக்கும் படை ஒன்று இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்ற பேச்சு ஐ. நா. 'வட்டாரங்களில் தொடர்ந்து அடிபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ. நா. அமைதிகாக்கும் படையொன்றை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவு திரட்டுபவர்களில் அமெரிக்காவில் உள்ள சில தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தோரும் இடம்பெற்றுள்ளனர் என்று "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ. நா. அமைதி காக்கும் படையின் தேவை இலங்கையில் ஏற்பட்டிருப்பதாக தமிழ் போராளிகள் முன்மொழிந்துள்ளனர் என்றும்—

இந்திய அரசாங்கம் இதனை எதிர்த்துள்ளது என்றும்—

அண்மையில் வெளியிடப்பட்ட அமெரிக்க உளவு நிறுவனமான சி. ஐ. ஏயின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதி காக்கும் படை அனுப்பப்படவேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டுள்ள, பிராந்திய நெருக்கடிக்குள்ளாகியுள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கையும் அடையாளம்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி வடக்கு - கொம்மந்தறை
ஸ்ரீ மனோன்மணி அம்மன்
## ஆலய வருடாந்த உற்சவ
காலத்தில்

ஆலய முன்றிலில் 01-07-1993 வியாழக்கிழமை தொடக்கம் 10-07-1993 வரை தொடர்ந்து பத்து நாட்களுக்கு தினமும் இரவு 9-15 முதல் 10-15 வரை

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்
திரு. இ. ஜெயராஜ் அவர்களால்
கம்பராமாயணத் தொடர் விரிவுரை
நிகழ்த்தப்படும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

— அம்பாள் அடியார்கள்.

(26283)



சுன்னாகம் ஐயனார் ஆலய
## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

இன்று 30-06-1993

பகல்:- விசேட 1008 சங்காபிஷேகமும், அன்னதானமும்.
இரவு:- திருக்கல்யாணம்
விஷேட நிகழ்ச்சிகள் -
மேளக் கச்சேரி
வில்லிசை
கலாவினோதன் சின்னமணி குழுவினர்
இசை நிகழ்ச்சி
ஆனந் இசைக்குழுவினர்

— சுன்னாகம் ஐயனார் ஆலயம்

(5977)



## நவகைடன்ஸ்
அருச்சுனா வீதி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

A/L 94 & 95


| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீகாந்தன் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | — | திரு. சிவமகாலிங்கம் |
| அரசியல் | — | திரு. கேதீஸ்வரன் |

ஆரம்பம்: 03 - 07 - 1993
1-30 மணி

குறிப்பு: 94 A/L ஆரம்பத்திலிருந்து அலகு ரீதியாக மீட்டலும்-வினாவிடையும்

(சி 5340)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் லம்பா
(இராஜரட்ணம் ஆனந்தராஜா)

அன்னையின் மடியில்:- 19-04-1969
விடியலின் பாதையில்:- 30-06-1992

ஒரு புயலின் வேகமாய் எழுந்த
எம் இளைய புதல்வனே
எங்கே சென்றனை!
இதய மேடையில்
உன் உதய தாகத்தை தாங்கி
கனக்கும் விழிகளுள்
உன் கனவினைச் சுமந்து
உயிர் மூச்சுக் கலந்த
இந்தக் காற்றைப் போல்
நம்பிக்கையுடன் அசைகிறேன்
நாளை விடியும்
உன் கனவு பலிக்குமென்று.

குடும்பத்தினர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(26300)

## ஆலயங்களில்

சுன்னாகம் தாளையடி ஐயனார் கோவில் சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறும். பகல் அன்னதானமும் மாலை திருக்கல்யாணமும் இடம்பெறும். (த-89)

o o o

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதி இராமச்சந்திர விக்னேஸ்வரர் கோவிலில் நாளைவியாழன் காலை 7 20 மணிக்கு விசேட கும்பாபிஷேகம் நடைபெறும். (த-162)

o o o

அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் அளவெட்டி வடக்கு ஐயனார் கோவில் கும்பாபிஷேக தின விழா நாளை வியாழக்கிழமை காலை நடைபெறும். (க-51)

o o o

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவர்த நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று புதன்கிழமை காலை ஏகாதசி விழா நடைபெறும். (க-51)

o o o

அராலி வடக்கு ஸ்ரீ நடராஜப் பெருமான் தேவஸ்தான திருவிளக்கு சந்நிதானத்தில் சங்காபிஷேகமும் மணவாளக் கோல விழாவும் இன்று காலை 7. 30 மணிக்கு நடைபெறவிருக்கின்றன. (உ-3)

## சிற்பக் கலைஞருக்கு பாராட்டு

உரும்பராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய முருகப் பெருமானுக்கென அமைக்கப்பட்ட சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4-30மணியிலிருந்து 5-15மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

வெள்ளோட்ட விழாவை அடுத்து சித்திரத்தேரை அழகுற அமைத்து உதவிய சிற்ப கலாமணி ''விஸ்வப் பிரம்மஸ்ரீ'' செல்லையா பாலச்சந்திரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

## புலிகளுக்கு ஆதரவான ஒருவர் கைதாம்

சென்னை, ஜூன், 30

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்து வந்த தீவிரவாத அமைப்பு ஒன்றைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் ஒருவரை பொலீஸார் தடா சட்டத்தின்கீழ் கைது செய்து காவலில் வைத்தனர்.

அந்த அமைப்பின் தலைவரும் இன்னொருவரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இந்த நபர் கும்பகோணத்தில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார் என்று சொல்லப்படுகிறது.

இதனிடையில்— சிதம்பரனார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க சிறப்புப் பொலீஸ் படை ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில்

மருதனார்மடம் கோட்டத்துக்கு உட்பட்ட கொத்தணிகளால் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களின் சிறப்புக்குரிய சித்திரங்கள் நாளை வியாழன் காலை 8 30 மணி முதல் இராமநாதன் கல்லூரியில் காட்சிக்கு வைக்கப்படும். (த-152)

o o o

மருதனார்மடம் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வியாழன் பிற்பகல் 1.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (த-152)

## திருத்தம்

நேற்றைய உதயன் 2 ஆம் பக்கத்தில் பிரசுரமான''நாகம் பூசித்த நாகபூஷணியாள்'' என்ற விளம்பரத்தின்—

இரண்டாவது பந்தியின் நாலாவது வரியில் மனிததீவு என்பதற்குப் பதிலாக மணித்தீவு என்றும்—

நான்காவதுபந்தியின் இரண்டாவது வரியில் உபர நாக பாம்புகள் என்பதற்குப் பதிலாக [illegible] என்றும் திருத்தி வாசிக்கவும்.

விளம்பரதாரர்

## திருமலை பஸ் நிலையப்பகுதி கடும் பாதுகாப்பு ஏற்பாடு

திருகோணமலை பிரதான பஸ் நிலையம் மற்றும் தனியார் பஸ்நிலையம் என்பனவற்றை உள்ளடக்கிய பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பயணிகள் எடுத்து வரும் பொதிகள் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. சந்தேகத்திற்கு உரியவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

பிரயாணிகள் தவிர்ந்த ஏனையோர் பஸ் நிலையப் பகுதிக்குள் செல்லும்போது, தமது அடையாள அட்டைகளை வாசலில் உள்ளபொலீஸ் காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டே செல்ல வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. (ஒ-3)


## தேவை

T. மகேந்திரன் என்ற நோயாளிக்கு உடனடியாக ''ஓ பொசிற்றிவ்'' இரத்தம் தேவைப்படுகிறது. தயவு செய்து 30 | 2 விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

நன்றி
திருமதி. சித்ரா மகேந்திரன்.
-சுண்டுக்குளி-
(26302)



## நவகைடன்ஸ்
அருச்சுனா வீதி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


A/L 94, 95
விஞ்ஞானப் பிரிவு
ஆரம்பம்: 03-07-1993
காலை 10-00 மணி

O/L வார இறுதி வகுப்பு
தமிழ்மூல க. பொ. த, பரீட்சைக்கான
மீட்டலும் வினா-விடையும்
ஆரம்பம்: 03-07-1993
காலை 8-00 மணி
ஆண்டு 9, 10 வகுப்புக்களும் நடைபெறும்.

O/L Day Class (பகல் நேரம்)
புதிய பிரிவு
ஆரம்பம்: 03-07-1993
காலை 8-00 மணி

(5388)


பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர்
உயர்திரு. ஆர். எஸ். நடராசா
அவர்களின்
## அகவை அறுபது நிறைவாழ்த்து



உளவியலில், ஆங்கிலத்தில்
உறுகல்விப் பயிற்று நெறிப்
புலமையினில், பலாலிபயில்
ஆசிரியர் புரவலராய்,
பழகு தமிழ் சுரைத்த சுவைப்
பாகு மொழி பணிவிவற்றால்
உலகு தழீ இயஒட்பத்து
உயர் ஆர் எஸ். வாழியவே!

அறுபதினை வாழ்த்தும் யாம்
அப்பாலும் அப்பாலாய்
பெறு பதவி, சுகம் வாழ்வு
பேணி நிறை ஆயுளுடன்
தெறு புலமை கதித் தோங்க
தேஜஸ்மிக மெய்கண்டு.
அறுபதங்கள் முரல் அழகைக்
கதிபன் என வாழியவே!

கணித நெறி மாணவர்கள்,
பலாலி ஆசிரியர் கலாசாலை,
திருநெல்வேலி.

(26294)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய முருகனின்
# ★ சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா ★
(30 – 06 – 1993)

## ஆசியுரைகள்

கொன்றை மரத்தை தலவிருட்சமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகப் பெருமானின் தம்பியாகிய முருகப் பெருமான் அடியார்களின் குறைதீர்த்து அருள் புரிந்து கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறார். அண்ணனுடன் மரகதமயிலேறி வள்ளி தெய்வயானை சமேதரரான முருகப்பெருமான் பவனி வர ஒரு புதிய சித்திரத்தேரை திருப்பணிச் சபையாரைக் கொண்டு தேர் இல்லாக் குறையை நிவர்த்தி செய்திருக்கிறார் ஒடையம்பதிப் பெருமான்.

அவ்விதமாகிய தேரை குறுகிய காலத்தில் சிறப்பாக முருகப் பெருமான் மீது கொண்டுள்ள பக்தி காரணமாக விசாக நட்சத்திரக்காரரான செ. பாலச்சந்திரன் அமைத்துக் கொடுத்திருக்கிறார். அவரின் பணி போற்றுதற்குரியது. சபையாரின் பணியோ மிகவும் மேலானது. இரவு பகல் பாராமல் தொண்டாற்றியிருக்கிறார்கள். குறிப்பாக தலைவர், தனாதிகாரி, காரியதரிசி இவர்கள் மூவரும் மிகச் சிறப்பாக ஒற்றுமையாக பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களது வேணவா பூர்த்தியாகவும் சந்திரன் ஒளி வீசவும் புதிய சித்திரத் தேரில் முருகன் பவனி வரும் காட்சியை பக்த கோடிகள் கண்டானந்திக்கவும் எமது எண்ணம். எவ்வித இடையூறுமின்றிப் பூர்த்தியாக வேண்டுமென செற்றில் மேயவள்ளி மணாளன் பாதார விந்தங்களைப் பணிந்து ஆசிகூறுகின்றேன்.

– சிவஸ்ரீ சுவாமிநாத இராசேந்திரக் குருக்கள்

பிரதமகுரு, நீர்வேலி கந்தசாமி தேவஸ்தானம்

★ ★ ★ ★ ★

உரும்பராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று ஓர் சிறப்பு மிகுந்த நாளாகும். எம்பெருமான் விநாயகரின் கருணையுடன் முருகப்பெருமான் எழுந்தருளிவர இங்கு ஓர் தேர் செய்யப்பட்டுள்ளது.

உரும்பராய் மக்களின் நீண்ட காலக் கனவு நனவாகி விட்டது.

இத்தேரை வயதில் சிறியவராயினும் தம்பி பாலச்சந்திரன் குறுகிய காலத்திலே மிகவும் திறம்படச் செய்துள்ளார். பல ஆலயங்களிலே அவருடைய கைவண்ணத்தைக் காணக் கூடியதாகவும் இருக்கின்றது.

அவருடைய பணி மேலும் வளர்ந்து இன்னும் பல தேவஸ்தானங்களில் அவர் தமது கைத்திறனைக் காட்ட வேண்டும் என என் சார்பிலும் உரும்பராய் மக்கள் சார்பிலும் ஆசீர்வதிக்கிறேன்

பிரதமகுரு ஐயாத்துரைக் குருக்கள்,

ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்.

## வாழ்த்துரை

''ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'' என்ற வாக்குக்கு மதிப்புக் கொடுத்துப் பேணுபவர்கள் எமது நாட்டுச் சைவ மக்கள். இந்த வகையிலே மேலும் எழுச்சி பெற்றத் திருப்பணிகளால் ஓங்கி நிற்கின்றன. நம் நாட்டுத் திருக்கோயில்கள். எங்கும் தேர்த்திருப்பணி; மஞ்சத்திருப்பணி; ஆலயங்களில் நடைபெற்றுவருவதை நாம் காண முடிகிறது.

உரும்பராய் வாழ் சைவ மக்கள் உயிராக மதித்துப் போற்றப்படும் கற்பகப் பிள்ளையார் கோயில் அற்புதமும் பெருமையும் வாய்ந்தது. அறிவு வளமும், பொருள்வளமும் மிக்க நன் மக்கள் பலர் இச் சூழலில் வாழ்கின்றார்கள் தற்போது முருகப்பெருமானுக்கு அழகிய சித்திரத் தேரை உருவாக்கி நிறைவு கண்டிருக்கிறார்கள். சிற்பச் சிகாமணி செ பாலச்சந்திரன் அவர்கள் சிரித்த முகத்துடன் திறம்படச் சிற்ப வேலைகளை நிறைவேற்றிக் கொடுக்கும் ஓர் இளைஞர். இவருடைய பக்தியும் கலையுணர்வும் நம் நாட்டுக் கோயில்கள் பலவற்றுக்கு பேராதரவாக விளங்குவது கண்கூடு. விநாயகனும் முருகனும் தேர் உலாவரும் காட்சியைக் காண இருப்பவர்களின் கண்ணும் மனமும் களிக்கட்டும். மேலும் மேலும் இவ்வாலயத் திருப்பணிகள் ஓங்கவும் பரிபாலனம் செம்மையாக நடைபெறவும் வாழ்த்தி அமைகின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,

தலைவர்,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## அண்ணனும் தம்பியும் அருகருகே
## தேரேறி வலம் வந்து அருள்புரிவர்

ஆலயம்தொழுவது சாலவும் நன்று என்ற ஔவையின் வாக்கை அனுவளவும் பிசகாமற் கடைப்பிடிப்பவர்கள் நம்மவர்கள். அதனால் குடா நாடெங்கும் ஆலயங்களை அழகுமிளிர அமைத்து, அங்கே எழுந்தருளியுள்ள மூலமூர்த்திகளையும், பரிவாரமூர்த்திகளையும் அழகுற அமைத்துள்ளனர்.

உரும்பராய் மக்களின் உள்ளங்கள் அனைத்திலும் உறைகின்ற எல்லாம்வல்ல கற்பக விநாயகர் திருத்தேரேறித் திருவுலாவரும்பொழுது, அவருடன் கம்பீரமாக உள்வீதி வலம்வந்த முருகன் அவருடன் திருத்தேரில் பவனிவர வசதியின்மையால் அண்ணனை வழியனுப்பிவிட்டுத் தன் இருப்பிடத்திற்குத் திரும்பிப் போகும் காட்சியைச் சகிக்க முடியாத அடியார்கள் முருகனுக்கும் ஒரு சித்திரத்தேர் அமைக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர்.

அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க 10-02-1993 காலை 9 மணியளவில் தேர் வேலை ஆரம்பமாயிற்று. முதலில் வெளிநாட்டிலுள்ள தமது ஊரவரிடமே பணம் திரட்டுவது எனப் பரிபாலனசபை முடிவு செய்தது. இப்பொழுது உள்ள சூழ்நிலையில் அது முழுமையாக நடைபெற முடியாது போயிற்று எனவே ஊர்மக்கள் பலர் தாமாகவே வந்து உதவினர். விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனல்லவா? அவன் அருளாலே அவன் தான் வணங்கிய பரிபாலன சபையினரின் விடாமுயற்சியால் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளது.



'இதனை இதனால் இவண்முடிக்கும் என்றாய்ந்து அதனை அதனால் அதன் கண்விடல்'' என்ற வள்ளுவன் வாக்கினை ஐங்கரனே அனுசரிப்பவர்போல, திருவுளச்சீட்டு மூலம் விஸ்வப்பிரம்மஸ்ரீ செ. பாலச்சந்திரன் தேர் வேலை செய்ய ஆண்டவனே அழைத்தார் அவ் இளைஞன் மலர்ந்த முகத்துடன், தொழிலாளருடன் தானும் அல்லும் பகலும் தொழில்செய்து இக்குறுகிய காலத்தில் திருத்தேரைப் பூர்த்தியாக்கியுள்ளார்.

கடந்த வருடம் கட்டுத் தேரில் பவனிவந்த கந்தன் இவ்வருடம் சித்திரத்தேரில் சிறப்பாக வரவுள்ளான் அண்ணனும் தம்பியும் அருகருகே அழகு ஒழுக வரும் நெஞ்சம் நிறையும் காட்சி காணும் எம்கண்களும், உள்ளங்களும் உவகையால் பூரிக்கட்டும். இவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கிய அடியார்கள் அனைவருக்கும், பரிபாலனசபையினருக்கும் விநாயகர், முருகனின் முழுக்கருணையும் கிடைப்பதாக! ★

— வீ. ஆறுமுகம் —

பரிபாலனச்சபைத் தலைவர்

## அருள் மணம் கமழும் கற்பகச் சோலை

உரும்பராய் ஒடையம்பதியை ஒரு கற்பகச்சோலை என்று கூறலாம். கற்பகம் என்கின்ற தேவதரு வேண்டியவர்களுக்கெல்லாம் வேண்டியனவற்றை நல்கும் அருள் விருட்சம். விநாயகருக்குரிய நாமங்களில் கற்பகம் என்பதும் ஒன்று. கருணையே உருவான கற்பகப்பிள்ளையார் அடியார்களுக்குக் கற்பகமாகக் காட்சி தருகின்றார். எனவேதான் கற்பகவிநாயகர் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தலமாகிய உரும்பராய் ஒடையம்பதி அடியார்களுக்கு அருள்நறுமணம் கமழும் கற்பகச் சோலையாகின்றது.

ஆலயங்களுக்கு நிகரானவை வித்தியாலயங்கள். ஆலயங்களுக்கு அயலிலே வித்தியாலயங்களை நிறுவிப் படிக்கும் பிள்ளைகளுக்கு நல்வழிகாட்டியவர் நாவலர் பெருமான். நாவலர் பெருமான் வழியில் கற்பக விநாயகர் ஆலயத்தின் அயலிலே அவ்வாலயத்துக்குரிய தருமசாதனக் காணியில் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை அமைந்திருப்பதும் ஒடையம்பதியின் உயர் சிறப்புக்கு ஒரு காரணமாகலாம்,

எல்லாம் வல்ல கற்பக விநாயகருக்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே அழகிய ஒரு சித்திரத்தேரை அமைத்து வைத்த ஆலய பரிபாலன சபையினர், இப்பொழுது திருமுருகன் திருவீதி எழுந்தருளத்தக்க வகையில் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு தேரை அமைத்திருப்பது பாராட்டத்தக்கது.

புதுவை சிற்பகலாமணி செ. பாலச்சந்திரன் அவர்களதும், அவர் தம் குழுவினரதும் கைவண்ணத்தை நன்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது திருத்தேர்.

திருத்தேரினைச் செய்தவர்கள், செய்வித்தவர்கள் இப் புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்டவர்கள் யாவரும் பாக்கியசாலிகளே. ''கற்பக விநாயகர் பொற்பதம் பணிவோர் நற்கதி பெறுவர்'' என்பது அருள்வாக்கு. ★

ஆசிரியமணி

அ பஞ்சாட்சரம்

## மனமார்ந்த நன்றிகள்

எல்லாம் வல்ல கற்பக விநாயகர் திருவருளை முன்னிட்டு எடுத்த காரியங்கள் எப்பொழுதும் சிறப்புற நடைபெறுவது வழக்கம். விநாயகன் திருத்தேரில் எழுந்தருளிக் காட்சி தரும் நாளில் இளவலாகிய முருகனும் வள்ளி தெய்வநாயகி சமேதராக இன்னொரு சித்திரத் தேரில் வரவேண்டும் என்று அடியார்கள் பல்லாண்டு காலமாகவே பிரார்த்தனை செய்து வந்தார்கள்.

முருகனுக்குரிய சித்திரத் தேரை உருவாக்குவதற்கு உதவிய பெருமக்கள் அநேகர். மலையளவு சுவாமிக்குத் தினையளவு புஷ்பம் என்றவாறு ஒவ்வொருவரும் இயலக்கூடிய அளவுக்கு நிதி உதவி புரிந்தனர். நிர்வாக சபையினர் அனைவரும் இம் முயற்சியால் ஈடுபட்டு அயராது உழைத்தனர். பரிபாலன சபைத் தலைவர், பொருளாளர் உள்ளிட்டவர்களின் வழிகாட்டலும் சிறப்பாக அமைந்தது.

திருத்தேரை அமைத்துத் தர ஒப்புக் கொண்ட சிற்பகலாமணி செ பாலச்சந்திரன் அவர்கள்தேர்ந்ததமதுகுழுவினருடன் இரவு பகல் என்று பாராது உழைத்து இன்று திருத்தேர் வெள்ளோட்ட விழாவும் இனிது நடைபெற உதவி இருக்கின்றார்கள்.

ஆலய பரிபாலன சபையாரின் வேண்டுகோளுக்கு இணங்கி உரும்பராய் கற்பக விநாயகர் ஆலய திருமுருகன் திருத்தேர்வெள்ளோட்டவிழா மலருக்கௌச் செய்திகளை அளித்ததுடன் உரையாற்றவும் இணங்கியவர்கள் பரிபாலன சபைத் தலைவர் ஆசிரியர் வீ. ஆறுமுகம், நீர்வேலி சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள், கற்பக விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு. ஐயாத்துரை குருக்கள், ஆசிரியமணி அ பஞ்சாட்சரம், சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி என்பவர்களாவர்.

திருத்தேர் வெள்ளோட்ட விழா மலர் சிறப்புடன் வெளிவர உதவியவர்கள் உரும்பராய் வர்த்தக சங்கத்தினர்.

சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உரும்பராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.

வணக்கம்

உரும்பராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் சார்பில்

ந. கணேசலிங்கம்

செயலாளர்.

சித்திரத் தேரினை உருவாக்கிய

### திரு. செல்லையா பாலச்சந்திரன்

அவர்களைப் பாராட்டிக் கௌரவித்து வழங்கும்

## வாழ்த்துப்பா

சீர்மேவும் உரும்பைநகர் கோயில் கொண்ட
சிந்தூரக் கற்பகவி நாயகன் தன்
தார்மேவு தம்பிமுரு கேசன் தேரில்
தண்ணுரும்பை வீதியுலாப் பவனி செய்ய
ஊர்கூடித் தேரிழுக்க உமைபு தல்வன்
ஒயிலாகப் பவனிவரும் தேர்சமைத்தான்
பார்போற்றும் ஆச்சார்யன் பாலச் சந்திரன்
பல்லாண்டு பல்லாண்டு வாழி! வாழி!!

சிற்பசாஸ்த் திரவிதிகள் கற்று நின்றான்
செந்தமிழர் பண்பாடு பண்பு மோங்கக்
கற்பனைகள் காட்சிகளாய்த் தேரில் வைத்தான்
கற்பகவி நாயகனும் களிப்பு மெய்தச்
சொற்பதங்க டந்தசிற்ப சித்தி ரங்கள்
சோபிக்கத் தெய்வமணம் கமழச் செய்தான்
விற்பனனாம் ஆசாரியன் பாலச் சந்திரன்
வியனுலகில் பல்லாண்டு வாழி! வாழி!!

கைவண்ணச் சிற்றுளியின் காந்த சக்தி
கலைவடிவ ரதமாக வடித்து வைத்தான்
மைவண்ண அலங்காரம் செய்து வைத்தான்
மாலைகளும் மணிகளுடன் அசைய வைத்தான்
மெய் வண்ண வேலேந்தும் முருக னுக்கே
மயிலாச னம்பாலச் சந்திரன் தந்தான்
செய்வண்ணப் பக்தியுடன் தேர்சமைத்தான்
சேர்ந்தவன் அருளால்ஆச் சார்யன் வாழி!

– ஊர்மக்கள்.

ஒடையம்பதி.
ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்,
உரும்பராய்.

(ஆக்கம்: ''கவிமாமணி'')

விளம்பர இலக்கம் (26293)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### ENGLISH STUDIES

English Grammar, Literature and Spoken English for all Categories and Examinations சகல வித்தினருக்கும் சகல பரீட்சைகளுக்கும் ஆங்கிலம் உரியமுறையில் கற்பிக்கப்படுகிறது. G.A.Q. Degree, N. C. E. Lecturer V.N. Kandasamy (Consultant English Studies) 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில். (6298)

### மணமகன் தேவை

யாழ். இந்து சமயத்தைச் சேர்ந்த 37 வயதுடைய பட்டதாரி ஆசிரியையான தமது சகோதரிக்கு 42 வயதிற்கு உட்பட்ட மணமகனை அவரது சகோதரர்கள் தேடுகின்றார்கள். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முதல் கடிதத்திலேயே முழுவிவரங்களுடனும் தொடர்புகொள்ளவும்: இல. 536, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26289)

### கண்டெடுக்கப்பட்டது

எமது கடையில் 25-06-93 அன்று மணிபேர்ஸ் ஒன்று வாடிக்கையாளரால் தவறவிடப்பட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தகுந்த ஆதாரம் காட்டி உரியவர் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். புதிய சீமாட்டி பிடவை மாளிகை, பிரதான வீதி, நெல்லியடி. (சி-5412)

### நாகபூஷணி படம்

நயினை நாகபூஷணி அம்மன் படம் பிறேம் செய்து விற்பனையாகிறது. விலை ரூபா 125/-. கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5327)

### மாற்றம்

இதுவரை காலமாக 33, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழியில் உச்சப்புள்ளி பெற உதவும் ஒரேயொரு நூல் ''புலமைப்பரிசில் மொழித் தேர்ச்சி'' அனைத்து வகை வினாக்களும் அடங்கியது. எங்கும் கிடைக்கும் (6294)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 30

இணுவில் மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை விழாவுக்குத் தலைமை வகிப்பார். யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (இ)

## நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜூன் 30

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களை சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 30ஆம் திகதி வரை அனுப்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வயதெல்லை 31 - 10 - 92ஆம் திகதி 22 வயதுக்கு குறையாமலும், 31 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (ஒ-3)

## மணிவிழா - வாழ்த்துக்கள்

மணிவிழா காணும் அதிபர்,

**உயர்திரு R. S. நடராஜா**

(பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

அவர்களை

வாழ்த்துகிறோம்.

பீடாதிபதி,
2ஆம், 1ஆம் வருட
(றோமன் கத்தோலிக்க நெறி)
பயிற்சி ஆசிரிய மாணவர்கள்.

பலாலி - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. (26290)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

வட்டுர் சின்னக் கதிர்காம தேவஸ்தான நிதிக்காக வட்டு சிவன் பூங்காவனத் திருவிழா அன்று (27 6-93) அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் வட்டு. சிவன் சங்காபிஷேகத் தினத்திற்கு (27-08 - 93) ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்,
வட்டு. சின்னக் கதிர்காம
தொண்டர் சபையினர்.

[சி 5336]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 08 — 1925

மறைவு: 31 — 05 — 1993

**செல்வி தெய்வநாயகி சிவசிதம்பரம்**

திதி:- 30—06—1993

உங்கள் திடீர் மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தினாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

''சிவகிரி''
கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய். (26291)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
05-05—1917

உதிர்வு:
09 07—1992

அமரர்

**கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி**

[இணுவில் மேற்கு]

திதி:- 30—06—1993

நீங்கள் காலமாகி விட்டீர்கள் என்று கவலைப் பட்டோம், ஆனாலும் நீங்கள் இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்ற முக்காலமுமாகி விட்டீர்கள். சாவு சாதாரண மனிதர்களுக்குத்தான். உங்கள் பாத மலர்களுக்கு காலமெல்லாம் அஞ்சலி கூறும்;

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஞானபதி,
இணுவில் மேற்கு,
இணுவில். (26272)

## மாதாந்தக் கலை நிகழ்ச்சி

இடம்: கோண்டாவில் மாவட்டச் செயலகம் மாவீரர் கலையரங்கு

காலம்: 30 - 06 — 1993

நேரம்: பிற்பகல் 7·30 மணி

கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-54/3) — கலை, பண்பாட்டுக் கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 09 — 1916

மறைவு: 10 — 07 — 1992

அமரர்

**தம்பிப்பிள்ளை வீரசிங்கம்**

திதி:- 30—06—1993

ஆண்டொன்று கழிந்த பின்னும்
நீண்டு வளர் நினைவலைகள்
தூண்டாச் சுடரொளியாய்
நுண்ணுணர்வில் துலங்குதையா!

தங்கள் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

— குடும்பத்தினர்.

அரசடி றோட்,
இருபாலை கிழக்கு,
கோப்பாய். (26295)

## நீங்காத ஓராண்டு நினைவலைகள்



மாவிட்டபுரத்தில் மழலையாக: 12 — 04 — 1972

கட்டைக்காட்டில் வரலாறாக: 30 — 06 — 1992

**லெப். மணிமாறன் (சர்மா)**

(வை. ரமணானந்தசர்மா)

மூசுகின்றமுனி யிரமானமன
மூளுகின்ற கொடுந் தீயுமானவனை
வீசுகின்றபுலி வீரனாயினன்
வீணர்மீதினில் வேட்டுமாயினன்
பேசுகின்றபெருஞ் சிற்பமாகஉயிர்
பேசனபின்புமனக் கோவிலாயினன்
மாகவென்றயாழ் இருதுமைந்தனோ
மானமென்பதைத் தானினைத்தனன்

கட்டைக்காட்டிலே காயம்விட்டவன்
கல்லிருக்கவே காயெடுத்தவன்
திட்டமானஉயர் சாரணீயனாய்த்
திறல் மிகுந்த எம் தலைவனானவன்
நெட்டையானமனம் நிமிருகின்றவுடல்
நீள்கழுத்திலே நஞ்செடுத்தவன்
மெட்டைநாமினிப் பாடுதல்விட
மேன்மைகொள்செயல் வேறிருக்குமோ!

குடும்பத்தினர், நண்பர்கள்.

குறிப்பு: அன்னாரின் நினைவு நிகழ்வு இன்று (30 - 06 - 1993) கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுதபிள்ளை அரங்கில் நடைபெறும். (26296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மீண்டும் நிரூபணம்

யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்காக, தடை விதிக்கப்பட்ட சில பொருள்களை வடக்கே எடுத்துவர அனுமதிப்பது என்ற இணக்கமான நிலைப்பாட்டில் இருந்து கொழும்பு அரசாங்கம் கடைசி நேரத்தில் பின்வாங்கியிருக்கிறது. பொருளாதாரத் தடையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது

குறிப்பிட்ட அளவு பொருள்கள் இங்கு வந்து சேர்ந்ததும் யுத்தக் கைதிகளை விடுதலை செய்வதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர் அதன் அடையாளமாக, நல்லெண்ணமாகப் பொருள்கள் வந்து சேர்வதற்கு முன்னரே ஐவரை விடுதலை செய்துமிருந்தனர் ஆனால் அரசாங்கம் குறிப்பிட்ட அளவு பொருள்கள் வந்து சேருவதற்கு முன்னரே கைதிகளை விடுதலை செய்யுமாறு கேட்டு முந்திய இணக்கத்திலிருந்து சறுக்கியிருக்கிறது. தான் இரண்டோ மூன்று கப்பல்களில் அனுப்பும் பொருள்களோடு திருப்திப்பட்டு யுத்தக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறது.

உண்ணாவிரதம் காரணமாக யுத்தக் கைதிகள் மரணம் அடையாமல் தடுப்பதற்கும் அதன் மூலம் அரச பக்கத்தில் நின்று போராடிய அவர்கள் மீது தனக்குக் கரிசனை உண்டு என்று காட்டுவதற்காகவுமே அரசாங்கம் அவசரம் காட்டியது.

ஆனால் யுத்தக் கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு உயிரைப் பிடித்துக் கொண்டதும், தனது காரியம் ஆகிவிட்டது என்ற நினைப்பில் முந்திய நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்குகிறது. கொடுத்த வாக்குறுதியை மீறிவிட்டது ஒன்பது நாட்களில் பச்சோந்தி போலத் தனது நிலையை மாற்றியிருக்கிறது.

கொழும்பு அரசாங்கள் — சிங்களத் தலைவர்களின் அரசாங்கங்கள் — தாம் செய்து கொண்ட ஒப்பந்தங்களையும், கொடுத்த வாக்குறுதிகளையும் கிழிப்பதிலும், மீறுவதிலும், பின்வாங்கிச் செல்வதிலும் கைதேர்ந்தவையாகும். ஏதோ ஒரு பொய்க் காரணத்தைக் கூறி சொன்ன சொல்லை, எழுதிய எழுத்தை மாற்றுவதில் வல்லன கடந்த ஐம்பது வருடங்களாக இத்தகைய பல அனுபவங்கள் தமிழர்களுக்கு உண்டு. தமிழர்களை ஏமாற்றுவதே சிங்களத் தலைவர்களின் சரித்திரமாகிவிட்டது.

நாம் இப்பத்தியில் முன்னர் குறிப்பிட்டதுபோல, கொழும்பில் இரண்டு அரசுகள் உள்ளன. அந்த இரண்டு அரசுகளில் நிழல் அரசான கூட்டுப் படைத் தலைமையகத்தில் அசல் அரசு பொருளாதாரத் தடையை நீக்க இணங்கியது குறித்து பலரும் அதிருப்தி கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நேரடியாகப் பேசுவதை அவர்கள் முற்றாக வெறுத்தனர். யாழ். மக்களின் தேவை பற்றிய பட்டியல் சென்றதும் அதனைப் பெரிதாக்கிக்காட்டி, அரசைத் தனது இணக்கப்பாட்டிலிருந்து விலகுமாறு நிர்ப்பந்தித்திருக்கின்றனர்.

ஜனாதிபதியும், அசல் அரசினரும் வழமைபோலவே சந்தர்ப்பம் கிடைத்தவர்களாக, தமது வாக்குறுதியை மீளப்பெற்றுவிட்டனர். யுத்தக் கைதிகளை விடுவிக்கும் விவகாரம் வடக்கு — கிழக்குப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஆரம்பப் புள்ளியாக அமையக்கூடிய வாய்ப்பை முறியடிக்க முனைந்திருக்கின்றனர்.

கொழும்பின் அசல் அரசு, தமிழர் விவகாரங்களில் படை அரசின் எண்ணப்படியே நடக்கும் என்பதையும், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதிலோ, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதிலோ தனக்கு உள்ளார்ந்த கரிசனை இல்லை என்பதையும் மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறது!

## பயணிகளின் பொருள்கள் பல தாண்டிக்குளத்தில் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தடை நீக்கப்பட்ட பொருள்கள் என ஸ்ரீலங்கா அரசினால் அறிவிக்கப்பட்ட பொருள்களை எடுத்து வந்த வடபகுதிப் பயணிகள் பலர் தாண்டிக்குளத்தில் அவற்றை இழந்து ஏமாற்றத்துடன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

பொக்கட் றேடியோ, பெற்றோல், டீசல் மற்றும் இதுவரை அனுமதிக்கப்படாத மருந்து வகைகள் ஆகியவற்றைக் கொண்டு வந்தவர்களே நேற்று வெறுங்கையுடன் வந்து சேர்ந்தனர்.

தாண்டிக்குளம் சோதனை முகாமில் படையினர் இவற்றைப் பறிமுதல் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒருவர் இரு டோர்ச் பற்றிகளைக் கொண்டு வரலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவற்றைக் கொண்டு வந்தவர்களிடம் இருந்தும் படையினர் அவற்றைப் பறிமுதல் செய்தனர்.

கொழும்பில் இருந்து வந்த பலரும் தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்களைத் தம்முடன் எடுத்து வந்திருந்தனர் என்றும் —

வழமையை விட தாண்டிக்குளம் சோதனை முகாமில் படையினரின் சோதனை கடுமையாக இருந்தது என்றும் —

படையினர் பொருள்கள் பலவற்றைப் பறிமுதல் செய்ததால் பயணிகள் பெரும் ஏமாற்றத்துடனும், மனச்சோர்வுடனும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

(இ-17)

## புதிய சைக்கிள்களுடன் யாழ். வந்த பயணிகள்

கொழும்பு, வவுனியாவில் இருந்து வந்து கடந்த ஒரு வார காலமாக பூநகரி, கிளிநொச்சிப் பகுதியில் தங்கி நின்ற பயணிகள் புதிய சைக்கிள்களுடன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

வவுனியாவில் வாங்கப்பட்ட சைக்கிள்கள் தற்போது கிளாலி மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளன.

சைக்கிள்களை எடுத்துச் செல்ல தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் படையினர் அனுமதி வழங்கி இருந்தனர்.

மேலும் நூற்றுக் கணக்கான பயணிகள் கிளாலியைக் கடப்பதற்காக பூநகரிப் பகுதியில் புதிய சைக்கிள்களுடன் காத்து நிற்பதாகவும் —

இவர்கள் அனேகமாக இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என்றும் — தெரிவிக்கப்படுகிறது

இதற்கிடையில், வவுனியாவில் உள்ள சைக்கிள் கடைகளில் சைக்கிள்கள் அனைத்தும் விற்பனையாகி விட்டதை அடுத்து கொழும்பில் இருந்து சைக்கிள்கள் லொறிகள் மூலம் வவுனியா வந்து சேர்ந்துள்ளன.

(இ-17)

## 5,000 கைக்குண்டுகள் நாகபட்டினத்தில் மீட்பு

### புலிகள் கொண்டு வந்தவையாம்

நாகபட்டினத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு சாதனங்கள் தமிழ் நாடு பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன

இவை 49 பெட்டிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஐயாயிரம் கைக்குண்டுகளும் இருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

கோயம்புத்தூரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட இவை, இலங்கைக்குக் கடத்தப்படுவதற்காக விடுதலைப் புலிகளினால் நாகபட்டினத்துக்கு எடுத்துவரப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-எ)

## வடக்கு - கிழக்கில் மேலும் 26 பிரதேச செயலகங்கள்

கொழும்பு, ஜூன் 30

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேலும் 26 பிரதேச செயலகங்கள் நிறுவப்படவிருப்பதாக பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண அமைச்சு அறிவித்திருக்கிறது.

இம்மாகாணத்தில் ஏற்கனவே எட்டு பிரதேச செயலகங்கள் இயங்கி வருகின்றன.

நாட்டில் இப்பொழுது 200 பிரதேச செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

(இ-எ)

## தெரிவுக் குழுக் கூட்டத்தில் தொண்டா பங்கு பற்றுவார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வுகளில் கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களை கலந்துகொள்ளச் செய்ய சபாநாயகர் மூஹம்மது எடுத்துக் கொண்ட முயற்சி அவ்வளவு பலனளிக்கவில்லை என்றும் —

ஆனால் அமைச்சர் தொண்டமானை தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளச் செய்வதில் மட்டும் சபாநாயகரின் முயற்சி வெற்றி கண்டுள்ளது என்றும் ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

தெரிவுக் குழுவின் அடுத்த அமர்வு எதிர் வரும் ஆறாம் திகதி நடைபெற இருக்கிறது.

தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளை இ. தொ. கா. உட்பட கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் தற்போது பகிஸ்கரித்து வருவது தெரிந்ததே.

(உ-எ)

### கல்வி, உயர்கல்வித் துறை உட்பட

## நான்கு அமைச்சுகளுக்கு புதிய அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு, ஜூன் 30

நிதி அமைச்சை மட்டும் தம்மிடம் வைத்துக்கொண்டு தம்மிடம் உள்ள வேறு நான்கு அமைச்சுகளுக்கு என புதிய அமைச்சர்களை நியமிக்க ஜனாதிபதி விஜேதுங்கா முடிவு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி —

கல்வி, உயர் கல்வி அமைச்சு, பௌத்த சாசன அமைச்சு, தொழில் அமைச்சு, திட்டமிடல் அமைச்சு ஆகியன புதிய அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலியாக உள்ள பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவியும் நிரப்பப்படவுள்ளது.

ஜனாதிபதியாக பதவி ஏற்கும் வரை திரு. விஜயதுங்க [illegible] அமைச்சர் பதவியையும் [illegible].

(உ-எ)

### நாளை

யாழ். மாவட்ட மனைப் பொருளியல் மூலவள நிலையத்தின் ஒராண்டு நிறைவு விழா, நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறும்.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் [illegible] விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஒ)

## ஐ.ஜி.பி வருட இறுதியில் ஓய்வு

கொழும்பு, ஜூன் 30

பொலீஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா இவ்வருட இறுதியில் ஓய்வு பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

திரு. பெரேரா தற்பொழுது விடுமுறையில் சென்றிருக்கிறார் சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபரான பிராங்க் டி. சில்வா பதில் பொலீஸ்மா அதிபராக பணிபுரிந்து வருகின்றார்.

இதே வேளை —

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் நிர்ப்பந்தம் காரணமாக ஓய்வில் சென்ற சில சிரேஷ்ட அதிகாரிகள் மீண்டும் பொலீஸ் சேவையில் சேர்ந்து கொள்ள முயற்சிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

### தி. மு. க. செயற்குழு சனி கூடும்

## நாஞ்சிலார் வெளியேற்றம்: சூடாக விவாதம் நடக்கும்

சென்னை, ஜூன் 30

எதிர்வரும் சனிக்கிழமை தி.மு.க. செயற்குழு கூட இருக்கிறது. அப்பொழுது நாஞ்சில் மனோகரனை கட்சியிலிருந்து நீக்கியமை, இது தொடர்பாக வை கோபாலசாமி எம். பி கண்டனக் குரல் எழுப்பியுள்ளமை ஆகிய விடயங்கள் காரசாரமாக விவாதிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

தி.மு.கவில் உள்ள கோஷ்டி மோதல் அன்றைய தினம் பகிரங்கமாக வெளிப்படும் என அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இதனிடையில் —

தி. மு கவில் இருந்து ஒருவரை நீக்குவதும் சேர்ப்பதும் தி. மு. க. பொதுச் செயலாளரின் அதிகார வரம்புக்கு உட்பட்டது என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி நேற்று முன்தினம் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தி. மு கவின் பொதுச் செயலாளர் திரு. க. அன்பழகன் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

## கருணாநிதி - நாஞ்சில் பேச்சு

சென்னை, ஜூன் 30

தி. மு.க. தலைவர் கருணாநிதியை, நாஞ்சில் மனோகரன் நேற்று ஒரு மணி நேரம் சந்தித்துப் பேசினார்.

நாஞ்சில் மனோகரன் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மற்றும் சாதாரண உறுப்பினர் பதவிகளில் இருந்து அண்மையில் வெளியேற்றப்பட்டார்.

அவர் திரு. கருணாநிதி பற்றி தாம் முன்னர் வெளியிட்ட கருத்துக்கு வருத்தம் தெரிவித்ததுடன், தம்மை மீண்டும் தி.மு.கவில் சாதாரண உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளும்படி தி.மு.க. தலைமைப் பீடத்துக்கு விண்ணப்பித்திருந்தார்.

இது தொடர்பாகவே அவர், திரு. கருணாநிதியை நேற்று சந்தித்துப் பேசினார்.

(உ-எ)

## பிரபாவை நாடு கடத்த பிரேமா இணங்கியிருந்தார்?

### ராவிடம் தெரிவித்திருந்தாராம்

கொழும்பு, ஜூன் 30

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா கடைசியாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவை பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலும் இந்தியத் தலைநகர் புதுடில்லியிலும் சந்தித்துப் பேசியபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை ராஜீவ் கொலை வழக்கு விசாரணைக்காக நாடு கடத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார் என்றும் —

அதனால் பிரேமதாஸாவைப் படுகொலை செய்ய இதுவே சரியான தருணம் என்று விடுதலைப் புலிகள் முடிவு செய்தனர் என்றும் அதுப் பற்றியும் நிபுணர்களை மேற்கோள்காட்டி ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது

எப்படியாயினும் —

புதுடில்லிப் பேச்சின்போது, திரு. பிரபாகரனைப் பிடிக்கத்தாமும் முயற்சி செய்வதாக திரு. பிரேமதாஸா இந்தியப் பிரதமரிடம் தெரிவித்தார் என்றும் —

அதற்கு இந்தியப் பிரதமர், திரு பிரபாகரனைப் பிடிக்கும் நடவடிக்கைக்கு விசேட குழு ஒன்றைத் தாம் அனுப்ப முடியும் எனப் பதிலளித்தார் என்றும் ''சண்டே ரைம்ஸ்'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலை பற்றிய விசாரணைகளின்போது இத்தகவல்கள் வெளியாகின என்றும் அப்பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது (உ-எ)

## விளையாட்டு நிகழ்வுகள்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும் கரும்புலிகள் நாளையொட்டி நடத்தப்படும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் சிலம்படியும், போர்த்தேங்காய் அடித்தலும் போட்டிகள் நாளை வியாழன் பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

போர்த் தேங்காய் அடித்தல் மரபுக்கமைய நின்றவாறும், இருந்தவாறும் அமையும் என்றும் —

இப் போட்டியில் பங்கு பற்றுவோர் ஆளுக்கு 25 தேங்காய்கள் என்ற அடிப்படையில் கொண்டுவர வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

அரங்கப் போட்டியின் யாழ் மாவட்டத்துக்கான இறுதித் தேர்வு ஜூலை மாதம் 3, 4 ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

அரங்க நிகழ்ச்சிகள் யாவையும் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 10 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் பதிவு செய்யப்பட்டு சுட்டிலக்கம் வழங்கப்படும் என்றும் —

குறித்த நேரத்தில் பதிவு செய்யப்படாத நிகழ்ச்சிகள் போட்டியில் இடம்பெற அனுமதிக்கப்பட மாட்டா என்றும் அறிவிக்கப்படுகின்றது. (த)

o o o

யாழ். வைக்கிங்ஸ் விளையாட்டு கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டு வரும் விலகல் முறை உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இன்று மாலை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3-30 மணி:- பாடுமீன் ''ஏ'' அணி எதிர் பாடுமீன் ''பி'' அணி

★ 4-30 மணி:- சென். மேரிஸ் அணி எதிர் சென். அன்ரனீஸ் ''ஏ'' அணி

(உ-17)

o o o

டாக்டர் எஸ். இராஜேந்திரம் நினைவு வெற்றிக் கிண்ணத்துக்காக சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும்—இரண்டாவது வருடாந்த—மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ 3-30 மணி:- சத்தியா விளையாட்டுக் கழகம் ''பி'' அணி எதிர் மணிமோகன் வி.க. ''ஏ'' அணி

★ 4-30 மணி:- செல்வா வி.க. ''ஏ'' அணி எதிர் சத்தியா வி.க. ''பி'' அணி

இப்போட்டிகள் யாவும் சங்கானை பாரதி மைதானத்தில் நடைபெறும்.

(உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை உடன் தீர்வுகாண்க!

# மனித உயிர்கள் அழிவதால் அரசு இலக்கு தாமதமாகும்

கொழும்பு, ஜூன் 30

''நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் 20 சதவீதமான நிதி பாதுகாப்புச் செலவினத்துக்கு என ஒதுக்கப்படுகின்றது. இலங்கையில் தொடர்ந்து மனித உயிர்கள் அழிவது, புதிய கைத்தொழில் மயமாக்கப்படும் இலக்கை நோக்கிச் செல்வதை தாமதப்படுத்திவிடும். ஆகையால் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்படுவது அவசியமாகும்.''

இப்படிக் கூறினார் தேயிலை வர்த்தகர் சங்கத் தலைவர் மைக்கல் டி. சொய்ஸா.

அண்மையில் ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

''ஒவ்வொரு ரூபாவில் இருந்தும் 20 சதம் தேசிய பாதுகாப்புக்கென ஒதுக்கப்படுகிறது. ஆகையால் தொடரும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படவேண்டும். பிரதமர் இதுவிடயத்தில் எடுக்கும் முன்முயற்சிகளுக்கு நாம் பூரண ஆதரவு வழங்குவோம். அதன் மூலம் நிரந்தர அமைதி நாட்டு மக்களுக்கு கிடைக்கும்'' என்றார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார்.

(ஒ-3)

## இலங்கைக்கு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லில் காணப்பட்டுள்ளது என்றும்—

அப்பட்டியலில் இடம்பெறும் ஏனைய நாடுகளாக றுவாண்டா, தென் ஆபிரிக்கா மற்றும் அப்காஸியா ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் ''சண்டே ரைம்ஸ்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அனுப்பப்பட வேண்டிய உத்தேச அமைதி காக்கும் படை பற்றிய விவரங்களும் சி. ஐ. ஏ. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:-

★ படையில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை 500 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

★ இதற்கான செலவாக 5 கோடி டொலருக்கு மேல் மதிப்பிடப்பட்டுள்ளது

★ படை அனுப்பும் யோசனையை இலங்கைத் தமிழ்ப் போராளிகள் முன்மொழிந்துள்ளனர். இந்தியா எதிர்த்துள்ளது.

★ தமிழ்ப்போராளிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் இடையேயான யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பது அமைதிப்படையின் முக்கிய ஆணையாக இருக்கும். (உ-எ)

## கொழும்பில்...

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பலர் தொடர்ந்து சிறைக்கூடங்களில் வைத்து விசாரிக்கப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

தமிழர்களைக் கைது செய்யும் படலம் தொடர்வதாகவும் —

பொலிஸ் நிலையங்கள் சிறைக்கூடங்களாக மாறிவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கைதிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

உறவினர்கள் 49 பேர் தற்போது இங்கு தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் வடமராட்சிப் பகுதியில் யுத்தத்தினால் பாதிப்புற்ற பகுதிகளைப் நேற்றுப் பார்வையிட்டனர்.

(உ 3-5-155)


## மானிப்பாய் சில்வர்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினர்

நடத்திய

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

1 ஆம் பரிசு:- 1291 துவிச்சக்கர வண்டி (லுமாலா)
2 ஆம் பரிசு:- 4236 பெற்றோல் மக்ஸ்
3 ஆம் பரிசு:- 2962 சுவர்க் கடிகாரம்

ஆறுதல் பரிசு

(1) 1421 (2) 3099 (3) 1955
(4) 696 (5) 626

குறிப்பு:- இப்பரிசுப் பொருள்களை 20-07-1993க்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். அதன்பின்னர் பரிசுப் பொருள்கள் கழகத்துக்கு சொந்தமாகும்.

தலைவர்: ஜெ. கருணாகரன்
பொருளாளர்: இ. சீலன்

(26301)



## மரண அறிவித்தல்

### சி, த, சண்முகம்பிள்ளை

உடையார் லேன் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை-தம்பு சண்முகம்பிள்ளை 29.6 93 இல் காலமாகிவிட்டார்.

இவர் சீனியர் லேன் கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்புவினதும், தையல்முத்துவினதும் அருமை மகனும், திருமதி. இராசம்மாவினது அன்புக்கணவரும், உடையார் லேன் கொக்குவிலைச் சேர்ந்த தம்பையா தம்பதிகளின் மருமகனும், டாக்டர் பாலசுப்பிரமணியம் (U.K) திருமதி. ஜெகதீஸ்வரி|விமலேஸ்வரன், காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா ஆகியோரது அருமைத் தந்தையாரும். திருமதி. சுபத்திரா (U.K), DR. விமலேஸ்வரன் (அரசினர் வைத்தியசாலை, முந்தல்), இராஜேஸ்வரி (மலேசியா) ஆகியோரது அன்பு மாமனாரும், ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பொறியலாளர் S.T. கந்தையா, காலஞ்சென்ற கனகசபை ஆகியோரது அன்புச் சகோதரரும், பாலினி, சுகந்தினி, அரவிந்தன், வினோதன், ஆதித்தன், பாலகுமார், முகுந்தன் ஆகியோரது அருமைப் பேரனுமாவார்,

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (30. 6. 93) புதன்கிழமை 12 மணியளவில் ''செல்வபதி'' சீனியர் லேன், கலட்டியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி. ஜெ. விமலேஸ்வரன் (மகள்)
''செல்வபதி'' 18/1 சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

26297


## மாகாணசபை உறுப்பினர் விபத்தில் பலி!

கொழும்பு, ஜூன் 30

களுத்துறை, ஹொரணை வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற கார் விபத்துச் சம்பவத்தில் மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் பலியாகினர்.

ஹொரணை வீதியில் துவரகல பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த அந்தக் கார் திடீரென பாலத்தில் இருந்து விலகி ஓடை ஒன்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட மேல்மாகாண சபை உறுப்பினர் ஜெயந்த குணதிலக, அண்மையில் நடந்த மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

(உ-5)

## புதிய...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

ளது

இது குறித்து விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ பேச்சாளர் தெரிவித்ததாவது:-

தடை நீக்கப்பட்ட பொருள்கள் சம்பந்தமாக வடபகுதி மக்களின் தேவைகளை ஒரு குறிப்பிட்ட அளவிலாவது பூர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் —

இந்தப் பொருள்கள் வடபகுதிக்கு வந்து சேரும் பட்சத்தில் யுத்தக் கைதிகளை விடுதலை செய்வதாகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது.

இது பற்றி ஜனாதிபதியின் பிரதிநிதியாக இங்கு வந்த பிரிகேடியர் வீரசேகரவிடம் விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் தெளிவாக எடுத்து விளக்கியிருந்தனர். மக்களின் தேவைகள் அடங்கிய பட்டியல் ஒன்றையும் திணைக்களங்களினூடாகப் பெற்று யாழ். அரச அதிபர் மூலமாக விடுதலைப் புலிகள் பிரிகேடியர் வீரசேகரவிடம் சமர்ப்பித்திருந்தனர்.

இந்தப் பொருள்களில் குறிப்பிட்ட அளவாவது வடபகுதிக்கு வந்து சேர்ந்ததும் கைதிகளை விடுதலை செய்வதாக புலிகள் உறுதியளித்திருந்தனர். இந்த யோசனைக்கு அரசாங்கமும் இணக்கம் தெரிவித்திருந்தது.

ஆயினும் பொருள்கள் இங்கு வந்து சேரும் முன்னராகவே பிரிகேடியர் வீரசேகர மூலம் கைதிகளை விடுதலை செய்யுமாறு அரசு கோரியது

ஆனால் பொருள்கள் ஓரளவுக்கேனும் வந்து சேரும் பட்சத்தில் தான் கைதிகளை விடுதலை செய்ய முடியும் என பிரிகேடியருக்கு விடுதலைப் புலிகள் எடுத்துக் கூறியதுடன் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும் கூறினர்.

தடைநீக்கம் செய்யப்பட்ட பொருள்களை குறிப்பிட்ட அளவேனும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க அரசு தரப்பு விரும்பவில்லை.

இது குறித்து இராணுவத் தரப்பில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகவும் பிரிகேடியர் எம்மிடம் கூறியுள்ளார்.

உடன்பாடுகளைச் செய்வதும் — மீறுவதும் சிங்கள ஆட்சியாளர் கையாண்டுவரும் தந்திரோபாயம் என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள் — இப்படி அவர் கூறியதாக 'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது.

(உ-5)

## அல்லிப்பளை-

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொம்மர்கள் பளை, கிளாலி, எழுதுமட்டுவாழ் பகுதிகளை சுற்றி வட்டமிட்டதால், இப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு வந்திருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் சந்தையில் நின்ற வியாபாரிகள் பொதுமக்களும் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

நேற்று புலோப்பளை புனித இராயப்பர் தேவாலய இறுதி நாள் உற்சவத்திற்கு வந்திருந்த பக்தர்களும் கலவரமடைந்து ஓடினர். (உ-117)

## 2 போராளிகள் வீரச...

கடந்த ஞாயிறு காலை 10 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் 39 ஆம் கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகள் போராளிகள் மீது 40 ஆம் கிராமத்தில் இருந்து வந்த படையினர் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலினால் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர்

லெப்டினன்ட் நிசார் அல்லது அமுதகிரியன் (சதாசிவம் விஸ்வலிங்கம் — மட்டக்களப்பு) என்ற ... இச்சம்பவத்தில் ... வடைந்தார்

இதேவேளை — ... வெள்ளியன்று அர... நோக்கிச் சென்... ருந்த விடுதலைப் ... இராணுவத்தினர் ... இருந்து நடத்திய ... தாக்குதலில் ... விபுல் அல்லது ... தேவன் (கோப... ரகுநாதன் — ... என்ற போராளி ... டைந்தார்.

# பொருள்களின் விலை... நேற்று திடீர் அதிகா...

யாழ்ப்பாணம் ஜூன், 30

சில தினங்கள் வீழ்ச்சி அடைந்திருந்த பல பொருள்களின் விலைகள் நேற்றுக் காலை மீண்டும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் திடீரென உயர்ந்தன

மண்எண்ணெய் போன்ற பல பொருள்கள் நேற்றுக் காலை மாயமாக மறைந்தன எனினும் மாலையில் நிலவிய வீய சில வதந்திகளைத் தொடர்ந்து மண்எண்ணெய் சுமாரான விலைக்... பட்டது.

தடை செய்யப்... பொருள்களைக் ... கொண்டு வருவத... மதிப்பது என்ற ... பாட்டை அரசு ... கொண்டதைத் தெ... வியாபாரிகள் திடீ... களை உயர்த்தி ... பொருள்களை ... செய்தனர்.

(அ-5 17-162-...)

# தி. மு. கவின் ஆதர... காங்கிரஸ் கேட்கி...

## கருணாநிதி கூறுகிறா...

சென்னை, ஜூன் 30

இந்திரா காங்கிரஸ் தி.மு.கவின் ஆதரவைக் கோரியுள்ளதாக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்து இருக்கிறார்.

இந்திரா காங்கிரஸுக்கு தி.மு.க. ஆதரவளிக்க முன் வந்தால் அ.தி.மு.க. அரசைக் கலைத்துவிடுவதாக மத்திய அரசு வட்டாரங்கள் தம்மை அணுகி உறுதி மொழி அளித்துள்ளதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

இது சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்... ளது

ஆனால் காங்கி... கூற்றை மறுத்துள்... இதனிடையில் — தமிழகத்தில் இந்... கிரஸ் ஆட்சி பீட... தி.மு.க. சிவப்புக் ... விரிக்க மாட்டாது. அ.தி.க. அரசு ... இருக்கட்டும். எதிர்க்... தி.மு.க. இருப்பது ... திருப்தி அடைகின்... என்று கருணாநிதி ... ளார்.

# ஐ.தே.க. - காமினி க... இணைப்பு பற்றி பே...

கொழும்பு, ஜூன் 30

ஆளும் ஐ.தே. கட்சியுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை இணைப்பது குறித்து இருகட்சிகளினதும் உயர் மட்டத்தில் தீவிர பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுக்களில் ஐ, தே. கவின் சார்பில் அதன் பொதுச் செயலாளரும், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான சிறிசேன கூரே, அரசமைப்பு மற்றும் இராஜாங்க விவகார அமைச்சர் கே. என் சொக்ஸி ஆகியோரும்—

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் அதன் தலைவர் காமினி திஸநாயக்கா, பொதுச்செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோரும் பங்கு பற்றி வருகின்றனர்.

கடந்த வியாழ... இரவு இறுதியாக பே... நடைபெற்றதாகவும்— வெள்ளியன்று வெ... சென்ற அமைச்சர் சி... கூரே நாடு திரும்பியது... சுக்கள் தொடரும் ... தெரிவிக்கப்பட்டது

பேச்சுக்களில் பல சிக்... இருப்பதாகவும்—

வடமேல் மாகாண ... லமைச்சர் பொறுப்பை ... நாயக ஐக்கிய தேசிய ... ணிக்கு வழங்கவேண்டும் ... பிரச்சினை அதில் முக்... னது என்றும் — தெரி... பட்டது.

இலங்கை தொழி... காங்கிரஸ் போன்று ... தே. முன்னணியும் ஐ. ... வுடன் இணைந்து செ... வதா அல்லது ஐ. ஐ... முன்னணியைக் கலை... விட்டு அம்முன்னணி... சேர்ந்தோர். ஐ. தே. ... சேர்ந்து கொள்வதா எ... குறித்து ஆராயப்பட்டு ... கிறது. (உ...

## புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காசிம் உர்க்கான், பாதுகாப்பு அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கலஸ், யாழ் வதிவிட பிரதிநிதி திரு. அசோக் குமார் ஆகியோரும்—

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் ஆகிய இருவரும் பேச்சில் கலந்து கொண்டனர்

நேற்று மாலை 5 மணிமுதல் 6.30 மணிவரை நடந்த பேச்சின் போது அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் சமர்ப்பித்த யோசனைகளில் உள்ள சிக்கலான அம்சங்கள் பற்றி புலிகளின் பிரதிநிதிகள் ஐ. நா. அதிகாரிகளுக்கு எடுத்து விளக்கினர்.

புலிகளின் யோசனைகள் அடங்கிய அதிகாரபூர்வ அறிக்கை ஒன்று அடுத்த வாரம் ஐ. நா. அதிகாரிகளிடம் கையளிக்கப்படும்.

வியாழனன்று காலை ஐ.நா. அதிகாரிகள் புலிகளின் பாதுகாப்புடன் சென்று கேரதீவு பகுதியையும், கேரதீவு பாதையையும் பார்வையிடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## காமினிக்கு... அமைச்சர் பத...

ஐ. தே. கவுடன் ஜன... ஐ. தே. முன்னணி இணை... குறித்து நடக்கும் பேச்சு... வெற்றி பெறும் பட்ச... காமினி திஸநாயக்காவு... ஜி. எம். பிரேமச்சந்திர... கும் அமைச்சர் பதவி ... கப்படலாம் என்று ... புச் செய்திகள் தெரிவித்...

இரு கட்சிகளும் இணை... பட்சத்தில் இவர்களு... அமைச்சர் பதவிகளை ... குவதற்கான சூழ்நிலை... உருவாக்க ஐ. தே. க. ... ராக இருப்பதாகவும் தெ... கப்பட்டது. (உ...

## பொருளாதாரத்-.

[1 ஆம் பக்கத் தொடர்...

உபகரணங்கள் ஆகியவ... வடக்கே எடுத்து வருவ... வழி செய்யும் விதத்தில் ... பட்டிருந்த தடை உத்த... தற்போது மீண்டும் அ... குக் கொண்டுவரப்பட்... கிறது

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் தரவைச் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30-06-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org